2020

No. of Printed Pages : **4**

21500

**4561**

*Register Number*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**இரண்டாமாண்டு**

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் — மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

## பிரிவு - அ

**அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

**1.** 'பொருணீங்கிய' – இச்சொல்லைப் பிரித்து புணர்ச்சிவிதி தருக.

**2.** தன் வினையை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

**3.** வினைமுற்று என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

**4.** இடக்கரடக் கலினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

**5.** குழு உக்குறி என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

**6.** இனம் குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

**7.** "ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி" – விளக்குக.

**8.** கவிமணி தேசிக விநாயகனார் கவிதைக்கு கூறும் விளக்கம் யாது ?

**9.** சாலப்பேசினான், வாழ்க வாழ்க – எவ்வகைத் தொடரைக் குறிக்கும் ?

**10.** அள்ளற் பழனத்(து) <u>அரக்காம்பல்</u> வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட தெனவெரீஇ - <u>புள்ளினம்</u>தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
– அடிக்கோடிட்ட சொற்களுக்கு பொருள் கூறுக.

[ Turn over

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு **ஒவ்வொன்றுக்கும் 200** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. செய்வினை, செயப்பாட்டுவினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

12. இருபெயரொட்டுப் பண்புத் தொகையினை எடுத்துக் காட்டுடன் எழுதுக.

13. உவமை அணியை சான்றுடன் விளக்குக.

14. கவிதைக்குரிய இலக்கணங்களாக கவிஞர்கள் கூறும் கருத்துகள் யாவை ?

15. சிறுகதை எழுதுந்திறனை வளர்க்க எத்தகைய பயிற்சிகளை மேற்கொள்வாய் ?

16. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே
– இப்பாடல் உணர்த்தும் நயத்தை விளக்குக

17. 'கல்வியே அழியாச் செல்வம்' – என்பது பற்றி அறிவுரைக் கொத்து என்னும் நூலில் அழியாச் செல்வத்தையே அடைய வேண்டுமென்னும் அவா நம்மெல்லாரிடத்தும் இயற்கையாக இருந்தாலும், முத்துச்சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும் பாசிமூடிய பவளத்தின் நிறமும், மாசியில் மறைந்த மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும்போல் நம்மை மூடிக்கொண்டிருக்கும் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகி நாம் அறிவை இழந்து அழியாச் செல்வத்தை அடைய முயலாமல், நிலையின்றி அழிந்துபோகும் பொருள்களையே நிலையாகப் பிழைபட நினைந்து, அவற்றைப் பெறுவதிலும் அவற்றை நுகர்வதிலுமே நமது காலத்தை கழித்து விடுகின்றோம்.
    (i) இப்பகுதியின் மையக் கருத்து யாது ?
    (ii) இப்பத்தியிலுள்ள உவமைகளை எழுதுக.
    (iii) இப்பத்தியிலுள்ள அருஞ்சொற்களை எடுத்தெழுதுக.
    (iv) பத்தியில் இடம்பெறும் அழகிய தொடர்கள் யாவை ?

18. பன்னிரண்டு, நாலாயிரம் – நன்னூல் நூற்பா பயன்படுத்தி பிரித்தெழுதி விளக்குக.

## பகுதி - II
## பிரிவு - அ

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒவ்வொன்றிற்கும் 100** சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**10x2=20**

19. ஒரு நாட்டின் கல்வி அமைப்பிற்கான குறிக்கோள் யாது ?

20. சொல் என்றால் என்ன ? சான்று தருக.

21. உயர்நிலைத் திறன்களின் படிநிலைகள் யாவை ?

22. குழந்தைப்பாடல் வகைகள் யாவை ?

23. கீழ்காண் சொற்களிலுள்ள பிழையினைக் கண்டறிந்து திருத்தி எழுதுக.
    (i) முயற்சிவுடையார்
    (ii) அவ்வளவுப் பெரிய

24. பிழைக்கும், தவறுக்கும் உள்ள வேறுபாடு என்ன ?

25. வையக விரிவு வலையின் நான்கு வகைகள் யாவை ?

26. மொழிப்பயிற்றாய்வு கூடத்தில் நடைபெறும் பயிற்சிகள் யாவை ?

27. 'தமிழ் 99 முறை' பற்றி கூறுக.

28. அளவிடுதல் (Measurement) என்றால் என்ன ?

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு **ஒவ்வொன்றுக்கும்** 200 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும்.

**5x4=20**

29. மொழிப்பாட நூலின் இலக்கணம் யாது ?

30. அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்தும் சொற்களஞ்சியம் – விவரிக்கவும்.

31. மாணவர்கள் மொழித்திறன் பெற மொழிவிளையாட்டுகள் மிகவும் பயன்படும் – எவ்வாறு ?

[ Turn over

32. கட்டுரை எழுதும் வழிமுறைகள் யாவை ?

33. ஒப்புமையாக்கப் பிழையை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

34. பல்லூடகம் என்றால் என்ன ? கணினி உதவியுடன் மொழி கற்றலின் பயன்கள் குறித்து எழுதுக.

35. தமிழ் இணைய மாநாட்டு தீர்மானங்களை எழுதுக.

36. உறவுமுறை கடிதத்தின் படிநிலைகளை எழுதுக.

## பகுதி - III

ஒவ்வொரு வினாவிற்கும் 500 சொற்களுக்கு **மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) பாடநூலை ஆய்வுசெய்து மதிப்பிடுவதற்குரிய ஐந்து பண்புக் கூறுகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) மாணவர்கள் செய்யும் பிழைகளைப் பட்டியலிட்டு, பிழை நீக்க எத்தகைய வழிமுறைகளை மேற்கொள்வீர்கள்.

38. (அ) தமிழ் இணையப் பயன்பாட்டுச் செய்திகள் பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) மொழிப்பாடத்தில் புறவயத்தேர்வை அமைக்கும் முறையினை விளக்குக.

-oOo-